**பருத்தித்துறை நகரசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 21 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆம் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 17 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, பருத்தித்துறை நகரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 04 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றின் பெறுமதிகளை கணக்குக்குக் கொண்டுவரப்பட்டுள்ளமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 4,520,000 கணக்குகளில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்படாத வாகனம் பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டமையினால் ரூபா 270,900 பெறுமதியான மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் கூடுதலாக காட்டப் பட்டுள்ளது.

#### 1.3.3 கணக்கு பதிவேடு மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சபையினால் நட்டஈடு பதிவேடு, அளவைசிட்டை பதிவேடு மற்றும் காணி விற்பனை பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| **(அ) நகரசபை ஒழுங்கு விதி**<br>அத்தியாயம் III பிரிவு 54(1) | வீதவரி அட்டவணை நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன் செயலாளரிடம் கையளிக்கப்பட்டு டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டுமெனினும் அதனை நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்<br>நிதிப்பிரமாணம் 571 | இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 401,500 பெறுமதியான வைப்புக்களிள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபம்<br>10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய 41/90 ம் இலக்கம் | சபையின் வாகனங்களிற்கு எரிபொருள் எரிதல் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டெழும் செலவினத்தை விடக் கூடிய வருமானமாக ரூபா 29,497,752 விளைந்திருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விட கூடிய வருமானமாக ரூபா 31,138,713 ஆகவும் விளைந்திருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகளில் ரூபா 1,640,961 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வு ஆண்டிற்கான சபையினுடைய நிதிப் பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 6,633,599 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 10,505,737 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப் பெறுபேறுகள் ரூபா 3,872,138 ஆல் குறைவடைந்துள்ளமையைக்காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படுமூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படுமூலதனம் ரூபா 188,639,153 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படுமூலதனம் ரூபா 177,637,018 விளைந்திருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான தொழிற்படுமூலதனம் ரூபா 11,002,135 அதிகரித்துள்ளமையை காட்டுகின்றது.

**2.4 வருமான நிர்வாகம்**

**2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை** |
| | **ரூபா** 000 | **ரூபா** 000 | **ரூபா** 000 |
| இறைகளும் வரிகளும் | 985 | 1,078 | 3,342 |
| குத்தகை வாடகைகள் | 16,093 | 9,111 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 560 | 876 | - |
| ஏனைய வருமானங்கள் | 70,698 | 63,468 | 41,793 |
| **மொத்தம்** | **88,336** | **74,534** | **45,135** |

**2.4.2 ஆதனவரி**

அறவிடவேண்டிய ஆதனவரி ரூபா 1,895,390 இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 முத்திரைக்கட்டணம்**

ரூபா 26,899,879 பெறுமதியான முத்திரைக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் 103 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 89 பதவியினரே கடமையாற்றுகின்றனர் அதன் பிரகாரம் 14 பதவியினர் பற்றாக்குறையாக உள்ளனர்.

(ஆ) சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு வருடமொன்றிற்கு 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும் குறித்த சபையில் மீளாய்வாண்டில் 02 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மட்டுமே நடைபெற்றுள்ளது.

**3.2 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த 5 வருடங்களாக இரு சில்லு உழவு இயந்திரம் பயன்படுத்தப் படாதுள்ளது.

(ஆ) ரூபா 1,545,182 பெறுமதியான வாகனத்தரிப்பிடம் பயன்படுத்தப்படாதுள்ளது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------

ரூபா 4,768,900 பெறுமதியான 04 மூலதனவேலைத்திட்டங்கள் கைவிடப்படடுள்ளது.

**3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

-----------------------------------------

சபை சேகரிக்கும் கழிவுப் பொருட்கள் தரம் பிரிக்கப்படாது ஒன்றாகவே குவிக்கப்படுகின்றது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

----------------------------------------------------

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

-----------------------

**செலவினக் கட்டமைப்பு**

--------------------------------

பாதீட்டு செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 19,423 தொடக்கம் ரூபா 10,709,150 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**4.2 தீர்வு காணப்படாத கணக்காய்வு ஐயவினா**

-----------------------------------------------------

முறையற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஐயவினாவிற்கான தீர்வு இன்றுவரை கிடைக்கப்பபெறவில்லை.